# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI

## DEPOSITION OF WITNESS

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

**CC.No.26/2021** **DATE :19.06.2024**

அ.சா.**9**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.பூபதி | Father's Name | : பெரியசாமி |
| District | : சேலம் | Taluk | : சேலம் |
| Village | : கொண்டலாம்பட்டி | Calling | : SI(ஓய்வு) |
| Religion | : இந்து | Age | : - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.06.2024.

**(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்)**

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்ட காவல் துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 31-05-2023 ம் தேதி பணி ஓய்வு பெற்று, தற்போது சேலம் கொண்டலாம்பட்டியில் வசித்து வருகிறேன். கடந்த 09-06-2020 ம் தேதி, காலையில் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோதுமுன்னதாக எடப்பாடி, அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற செந்தில்குமார், வயது 42, என்பவரின் அடிதடி காயத்தகவலை பெற்று, மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த செந்தில்குமார் என்பவரிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்று, காலை 09.00 மணிக்கு நிலையம் வந்து மகுடஞ்சாவடி காவல் நிலைய குற்ற எண்.493/2020, சட்டப்பிரிவுகள் 147, 148, 341, 294(b), 324, 506(2) இதச- ஆக வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் வாக்குமூலத்தையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து, இவ்வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டேன் **( முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2) பின்னர், அன்றை தினமே, காலை 11.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடச்சாட்சிகள் கோவிந்தன், வடிவேல் ஆகியோர் முன்பாக சம்பவ இடத்தை

பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் **(பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது)**.

3) பின்னர், சம்பவ இடச்சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், சம்பவ இடத்தில் சம்பவத்திற்கு பயன்படுத்திய இரும்பு ராடு ஒன்றை அன்றைய தினமே, 13.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கையின் படி 5 ம் எதிரி கமலா மற்றும் 6 ம் எதிரி மல்லிகா ஆகிய இருவரும் குற்ற வழக்கில் சம்பந்தபடவில்லை என தெரியவந்ததால் அவர்களை நீக்கி எதிரிகள் நீக்குதல் அறிக்கை தயார் செய்தும், சட்டப்பிரிவுகளை 147, 148, 341, 294(b), 324, 506(2) இதச-விலிருந்து சட்டப்பிரிவுகளை 341, 294(b), 324, 506(2) இதச-வாக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தும் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7 ஆகவும், எதிரிகள் நீக்குதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆகவும், இரும்பு ராடு அ.சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

4) இவ்வழக்கில் எதிரிகள் நால்வரும் சேலம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை. மேலும், காயம்பட்ட வாதிக்கு விபத்து பதிவேட்டில் பதிவு செய்த எடப்பாடி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.மோகன்குமார் மற்றும் காயச்சான்று வழங்கிய சேலம் SKS மருத்துவமனை மருத்துவர் திரு.சசிக்குமார் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5) மருத்துவர் வாதிக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என காயச்சான்று வழங்கியதால் இவ்வழககின் சட்டப்பிரிவுகளை 341, 294(b), 324, 506(2) இதச-விலிருந்து சட்டப்பிரிவுகளை 341, 294(b), 326, 506(2) இதச-வாக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேலும் கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம்-91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து அது வழக்கு சொத்து எண்.02/2021 ஆக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது **( படிவம்-91 அ.சா.ஆ.10 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

6) இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகளை 341, 294(b), 326, 506(2) இதச-வாக ஆக குற்ற இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

1) சம்பவம் எதிரிகளின் வீட்டின் வாசலுக்கு முன்பு நடந்தது என்றால் சரிதான். பத்திரம் சம்பந்தமாக எதிரிகளுக்கும், வாதிக்கும் முன் விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். பத்திரம் சம்பந்தமாக பஞ்சாயத்து பேசியதாக சொல்லும்போது யார் முன்னிலையில் பஞ்சாயத்து பேசப்பட்டது என்று நான் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. சம்பவ நாளன்று மாலை 6:30 மணி அளவில் 1ம் எதிரி ஒரு ஆள் மூலமாக பத்திரத்தை வாங்கி செல்லுமாறு சொன்னதாக சொல்லும்போது யார் அந்த நபர் என்று விசாரணை செய்தேனா என்றால் இல்லை.

2) சம்பவத்திற்கு முன்னதாக பஞ்சாயத்து எதுவும் பேசப்படவில்லை என்றும், 1ம் எதிரி எந்த நபரின் மூலமாகவும் பத்திரத்தை வாங்கி செல்லுமாறு சொல்லவில்லை என்றும், நான் சரிவர விசாரணை செய்யாததால் தான் எனக்கு அதைப் பற்றி தெரியவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் செந்தில்குமார் மற்றும் பாலு ஆகியோர் எனது விசாரணையில் போன் மூலமாக பாலுவை தொடர்பு கொண்டு பத்திரத்தை வாங்கி செல்லுமாறு சொன்னதாக சொல்லி உள்ளார்களா என்றால் இல்லை. இவ்வழக்கில் எதிரிகள் ஆபாச வார்த்தையால் திட்டியதாக குற்றச்சாட்டு எதுவும் இல்லை என்றால் சரிதான்.

3) மல்லிகா மற்றும் கமலா ஆகியோர் வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் தங்களது விசாரணையில் எதிரிகள் "பத்திரத்தை கொடுக்க முடியாது கொல்லாமல் விடமாட்டேன்" என்று சொல்லி உள்ளார்களா என்றால் இல்லை, ஆனால் "இன்னிக்கு நீ தப்பிச்சிட்ட என்னைக்கா இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன்" என்று சொல்லி உள்ளார்கள்.

4) இவ்வழக்கு சம்பவத்தில் சுத்தியல் பயன்படுத்தியதாக சொல்லும் போது அதனை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் புகார் மற்றும் வாக்குமூலங்களில் சாட்சிகள் யாரும் இரும்பு ராடின் அளவு, தன்மை மற்றும் வளைந்து இருக்கிறதா அல்லது இல்லையா என்பது குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். இரும்பு கம்பி மற்றும் இரும்பு ராடுக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். இரும்பு கம்பி என்பது எந்த ஒரு டிசைனும் இல்லாமல் சற்று ஷைனிங்காக இருக்கும் என்றும், இரும்பு ராடு டிசைன் போட்டு

இருக்கும் என்றால் சரியல்ல, வழக்கு மொழியில் இரும்பு கம்பி மற்றும் இரும்பு ராடை ஒன்றாகதான் மக்கள் பயன்படுத்துகின்றனர்.

5) வழக்கு சம்பவத்தில் இரும்பு ராடு மற்றும் இரும்பு கம்பி பயன்படுத்தப்படவில்லை என்றும், நான் சொன்னவாறு எதிரிகள் யாரும் யாரையும் அடித்து காயப்படுத்தவில்லை என்றும், வழக்கில் கைப்பற்றப்பட்ட இரும்பு ராடு வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்டது இரும்பு ராடு அல்ல என்றும், இரும்பு கம்பி தான் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கில் ஒரு சான்று பொருளை கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்துடன் நான் வழக்காவணத்தை தயார் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

6) முருகேசன் என்பவர் வாதியை இரும்பு ராடால் தலையில் அடித்ததாக சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. பாலுவிற்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். செந்தில்குமார் மற்றும் பாலு ஆகியோர் ஒரு இரும்பு ராடை வைத்து முருகேசன் மற்றும் யுவராஜ் ஆகிய இருவரும் அடித்ததாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் வாதி செந்தில்குமார் பாலு, பாலு மகன் மணி ஆகியோர் ஒன்று சேர்ந்து எதிரிகளை தாக்கியதாக சொல்லி புகார் கொடுக்கப்பட்டு மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் குற்ற எண்.494/2020, சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 323, 506(2) இதச-வாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான் ( **முதல் தகவல் அறிக்கையின் கணினி நகல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

7) எலும்பு முறிவு ஏற்பட்டதாக காயச்சான்று வாங்கியுள்ளபோது எலும்பு முறிவு ஏற்பட்டதற்கான X-ray reportஐ நான் வழக்கு ஆவணங்களுடன் சேர்த்து உள்ளேன் என்றால் இல்லை. புகாரிலும், விசாரணையிலும் செந்தில்குமார் மற்றும் பாலு ஆகியோர் மிகைப்படுத்தி வாக்குமூலம் அளித்துள்ளதால் தான் இவ்வழக்கில் இருந்து கமலா மற்றும் மல்லிகா ஆகியோரை நீக்குதல் செய்து எதிரிகள் நீக்குதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவத்தின்போது செந்தில்குமார் மதுபோதையில் இருந்ததை நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல.

8) சம்பவத்திற்கு மறுநாள் தான் செந்தில்குமாரிடம் நான் வாக்குமூலம் பெற்றேன் என்றால் சரிதான். எடப்பாடி அரசு மருத்துவமனையில் செந்தில்குமார் மது போதையில் பரிசோதனைக்கு வந்தது குறித்து ஏதேனும் சான்றிதழ் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ நாளன்று செந்தில்குமார் மிகுந்த மதுபோதையில் எதிரிகளின் வீட்டிற்கு அருகே சென்று ஆடைகளை களைத்து பத்திரத்தை கேட்டு தகராறு செய்தார் என்றால் சரியல்ல.

அதை மனதில் வைத்துக் கொண்டு செந்தில்குமார், என்பவர் முருகேசன் மற்றும் மற்ற எதிரிகளை அடித்து காயப்படுத்தி அருகே கீழே கிடந்த மின் கம்பத்தில் விழுந்தும், அருகே இருந்த பள்ளத்திலும் விழுந்தும் ஏற்படுத்திக் கொண்ட காயங்களை வைத்து எதிரிகளுக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9) செந்தில்குமார் தான் எதிரிகளிடம் தகராறு செய்தார் என்றும், அதை மறைப்பதற்காக இந்த பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு எதிரிகள் புகார்தாரரை தாக்கவில்லை என்றும், கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றும், செந்தில்குமார் என்பவர் கொடுத்த பொய் புகார்மீது நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், இந்த வழக்கில் எதிரிகள், புகார்தாரர்க்கு எதிராக கொடுத்த புகாரில் இன்று வரை நான் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்யாமல் இருந்து வருகிறேன் என்றும், நான் எதிரிகளுக்கு எதிராக விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை.

Witness (Sd)-Boopathy

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.